கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு.டி.பன்னீர்செல்வம், எம்.பி.ஏ., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | நாள்: 11.11.2021 | | |
| அமர்வு வழக்கு எண். | 42/2020 | | |
| பெயர் | முருகவேல் | த/பெ | கல்யாணசுந்தரம் |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலூக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் தற்போது வேதாரன்யம் காவல் துணை கண்காணிப்பாலராக பணிபுரிந்து வருகிறேன். முன்பு பொறையார் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 14.03.2016 ஆம் தேதி உயர்அதிகாரிகளின் உத்தரவின்படி தனி அலுவலாக தனி அலுவல் குழுவோடு திருவெண்காடு காவல் நிலைய குற்ற எண். 99/2016 வழக்கின் தலைமறைவு எதிரி அகோரம் என்பவரை கைதுசெய்யவேண்டி திருவெண்காட்டில் தேடி வரும்போது பகல் 12 மணியளவில் கிடைத்த தகவலின்படி சம்பாத்தோட்டம் மாந்தோப்பில் ஆஜர் எதிரியானர் இருப்பதாக கிடைத்த தகவலின்படி அங்கு எனது குழுவினரோடு சென்று கண்காணித்தபோது போலிசாராகிய எங்களை எதிரி கண்ட உடன் எதிரி தன் கையில் வைத்திருந்த நீல நிறகைப்பையுடன் தப்பி ஓடியவரை பார்ட்டிசகிதம் வளைத்துப்பிடித்து மேற்படி எதிரி தன் கையில்வைத்திருந்த நீல நிறகைப்பையை அங்கு சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகள் மணிமாறன் VAO, சந்திரசேகரன் VAO உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றி சோதனை செய்து பார்த்தேன் அதில் Auto Pistol USM என்று ஒரு பக்கத்தில் பொறிக்கப்பட்டும் மறுபக்கத்தில் 9.657 Round No.110 என்றும் பொறிக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கி அந்தக் கைப்பையில் இருந்தது. அந்த துப்பாக்கியை பார்த்தேன் அதில் 2 தோட்டாக்கள் 7.65 kF என்று பொறிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தேன். அந்த கைப்பையில் உள்ளே 2 நாட்டு வெடிகுண்டுகள் இருந்தது. அந்த நாட்டு வெடிகுண்டுகள் சணலால் சுற்றப்பட்டிருந்தது. மேற்படி அபாயகரமான பொருட்களை சாட்சிகள் மணிமாறன் VAO, சந்திரசேகரன் VAO உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் மகசர் தயார் செய்து பகல் 12.30 மணிக்கு நீல

நிறகைப்பையுடன் கைப்பற்றினேன். அதற்கான கைப்பற்றுதல் மகசர் அ.ஆ. 1 ஆகும். அந்த கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகள் மணிமாறன் VAO, சந்திரசேகரன் VAO உதவியாளர் ஆகியோர் கையெழுத்து செய்தார்கள். பின்னர், எதிரியையும் தடையத்தையும் திருவெண்காடு காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று தனிஅறிக்கை தயார் செய்து மேல் நடவடிக்கைக்காக தனிஅறிக்கை சகிதம் காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். அதற்கான தனி அறிக்கை அ.ஆ. 2 ஆகும். எதிரி வைத்திருந்த நீல் நிறகைப்பை அ.சா.பொ. 1 ஆகும். Auto Pistol USM துப்பாக்கி அ.சா.பொ. 2 ஆகும். தோட்டாக்கள் இரண்டும் அ.சா.பொ. 3 வரிசையாகும் . நாட்டு வெடிகுண்டுகள் இரண்டும் அ.சா.பொ. 4 வரிசையாகும் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் விபரம் சொன்னேன்.

எதிரி தரப்பிலான குறுக்கு விசாரனை

இல்லை.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு.டி.பன்னீர்செல்வம், எம்.பி.ஏ., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

| | | | |
|---|---|---|---|
| அ.சா. 2 | நாள்: 11.11.2021 | | |
| அமர்வு வழக்கு எண். | 42/2020 | | |
| பெயர் | கருணாநிதி | த/பெ | நடேசன் |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலூக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் தற்போது திருவாரூர் மாவட்ட நன்னிலம் உட்கோட்ட காவல் பிரிவில் சிறப்பு டீமில் பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் மயிலாடுதுறை குற்ற சிறப்பு பிரிவில் இருந்தபோது கடந்த 14.03.2016 அன்று காவல் ஆய்வாளர் முருகவேல் தலைமையில் தலைமைக்காவலர் ராமமூர்த்தி மற்றும் காவலர் தெய்வ சிகாமணி , ஸ்டாலின், முகுந்தன் மற்றும் சிலர் கொண்ட சிறப்பு டீமில் நானும் பணியில் இருந்தேன். ஆஜர் எதிரி திருவெண்காட்டில் உள்ள எதிரியின் மாந்தோப்பில் எதிரி இருப்பதாக கிடைத்த தகவலின் பெயரில் சிறப்பு டீமாக பகல் சுமார் 12 மணிக்கு எதிரியின் மாந்தோப்புக்கு சென்றோம் அங்கு எதிரி இருந்தார். அவரோடு வேறு ஒரு நபரும் இருந்தார். எங்களை பார்த்தஉடன் எதிரியுடன் இருந்த அந்த நபர் ஓடினார். அகோரமுடன் இருந்த அந்த நபர் தான் தனது கையில் வைத்திருந்த ஒரு சிறிய நீல நிற கைப்பையை போட்டுவிட்டு ஓடிவிட்டார். நாங்கள் அந்த நபரையும் பிடித்துவிட்டோம். அகோரத்தையும் பிடித்தோம். கீழே அந்த நபர் போட்ட கைப்பையை நாங்கள் எடுத்துவந்து காவல் ஆய்வாளர் முருகவேலிடம் ஒப்படைத்தோம். அந்தக் கைப்பையை காவல் ஆய்வாளர் அங்கு வைத்து எங்கள் முன்னிலையில் திறந்துப்பார்த்தார். அந்தக் கைப்பையின் உள்ளே ஒரு பிஸ்டல், 2 தோட்டா ஆகியவை இருந்தது. அந்த நபரையும் அகோரத்தையும் காவல் ஆய்வாளர் பாகசாலை காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றார்கள். காவல் என்னை சாட்சியாக விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதற்கு அனுமதிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் போலிஸ் விசாரணையில் 14.03.2016 ஆம் தேதியன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் ஆஜர் எதிரி அகோரம் கையில் நீல நிற கைப்பையுடன் நின்றவர் போலிசாகிய எங்களை கண்ட உடன் தப்பி ஓடியவரை நாங்கள் வளைத்துப்பிடித்து எதிரி கையில் வைத்திருந்த கைப்பையின் ஜிப்பை திறந்துப் பார்க்க உள்ளே கைத்துப்பாக்கி ஒன்றும், இரண்டு தோட்டாவும், இரண்டு சணலால் கட்டப்பட்ட நாட்டு வெடிகுண்டுகள் இருந்தது என்றும். தடையத்தை ஆய்வாளர் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி மகசர் தயார் செய்து மகசரில் தடயத்தை கைப்பற்றி மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று எதிரி, தடயத்துடன் வந்து திருவெண்காடு காவல் நிலையம் வந்து எதிரி மீது நடவடிக்கை எடுக்க காவல் ஆய்வாளர் புகார் தனி அறிக்கை கொடுத்தார் என்றும் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும் விசாரனையில் சொல்லிவிட்டு தற்போது காவல் துறையில் நான் பணியாற்றுகிறேன் என்பதையும் மறந்து எதிரிக்கு ஆதரவாக எனக்கே தெரிந்த காரணங்களுக்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை</u>

எதிரியுடன் இருந்த அந்த நபர் பற்றிய விபத்தை காவல் ஆய்வாளர் முருகவேல் அந்த நபரிடம் விசாரித்து குறித்துக் கொண்டார் என்றால் சரிதான். ஆஜர் எதிரியுடம் இருந்து தடயம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான் மயிலாடுதுறை சரவணக்குமார் DSP சொல்லி டீம் துவங்கப்பட்டது.

மறுவிசாரணை

இல்லை.